அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.



# பொது (மறுவாழ்வு)த் துறை

## மானியக் கோரிக்கை எண். 38

அறிவிப்புகள்
2023 - 2024

## செஞ்சி கே.எஸ். மஸ்தான்

சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்

# பொது (மறுவாழ்வு)த் துறை

மானியக் கோரிக்கை எண். 38

அறிவிப்புகள்
2023 - 2024

செஞ்சி கே.எஸ். மஸ்தான்
சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்

1. **இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தொழிற்கூடங்கள் அமைக்க 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் செயல்பட்டுவரும், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சமுதாய மேம்பாட்டு நிதி வழங்கப்பட்டு, அவர்கள் அதன் மூலம் தையற்கலை, பாரம்பரிய முறையில் உணவுப் பொருட்கள் தயாரித்தல் உள்ளிட்ட பல்வேறு தொழில்களை அவர்கள் வசிக்கும் வீடுகளிலேயே செய்து வருகின்றனர். இதனால் அவர்கள் செய்யும் தொழில்கள் மூலம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வதில் சுணக்கம் உள்ளது. அவர்களுக்கென தொழிற்கூடங்கள் (work shed) அமைத்து தரும் நேர்வில், அவர்கள் மேற்கொள்ளும் தொழிலினை சீரிய முறையில் செய்வதோடு, அதன் மூலம் பொருள் ஈட்டி

வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்ள இயலும். இதன் மூலம் அவர்கள் தொழில் முறையை ஒன்றிணைத்து, வணிகத்துடன் ஒருங்கிணைக்க ஏதுவான சூழல் ஏற்படும்.

முதற்கட்டமாக, 10 இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு முகாம் ஒன்றுக்கு 30 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு தொழிற்கூடம் என்ற வகையில் (அதன் நிலையான செலவுகள் உட்பட) 10 முகாம்களில் 3 கோடி ரூபாய் செலவில் 10 தொழிற்கூடங்கள் கட்டித் தரப்படும்.



**2. இருநூறு புதிய மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதியாக 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

தமிழ்நாட்டில் உள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி மற்றும் சுழல் நிதி வழங்கப்படும் நிலையில், அவர்களின் சுயசார்புத் தன்மை நிலைநிறுத்தப்படுவதுடன் அவர்கள் வாழ்க்கைத் தரமும் உயர்கின்றது.

இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் செயல்படும் 321 சுய உதவிக் குழுக்களுக்கு "சமூக முதலீட்டு நிதியாக" தலா ரூபாய் 50,000-த்துடன் கூடுதலாக ரூபாய் 75,000 வீதம் ஒவ்வொரு சுய உதவிக் குழுவிற்கும் 2021-2022-ஆம் நிதியாண்டில் வழங்கப்பட்டது. மேலும், புதிதாக

300 சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு ஒவ்வொரு சுய உதவிக் குழுவிற்கும் ரூ.1.25 இலட்சம் சமூக முதலீட்டு நிதியாக 2022-2023-ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில், மேலும் 200 புதிய சுய உதவிக் குழுக்களுக்கு குழு ஒன்றிற்கு ஒரு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் ரூபாய் வீதம் 200 குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதியாக இரண்டு கோடியே ஐம்பது இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.



**3. சுய தொழில் புரிய ஆர்வம் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கு சுய தொழில் தொடங்க 2 கோடி ரூபாய் மூலதன நிதியாக ஒதுக்கீடு செய்யப்படும்.**

தமிழ்நாடு அரசால் அளிக்கப்படும் திறன் மேம்பாட்டு பயிற்சியில் கலந்து கொண்ட இலங்கைத் தமிழர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தி தரும் அதே வேளையில், சுய தொழில் புரிய ஆர்வம் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கு அதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவது அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேலும் மேம்படுத்தும். இலங்கைத் தமிழர் ஏராளமானோர் படித்தும், தகுதி இருந்தும் அவர்களின் சட்டரீதியான தகுதியின்மையால் வங்கிகளில் கடன் வாங்க இயலாத நிலையில், தினக்கூலி மற்றும் தங்கள் படிப்பிற்கு இணையில்லாத தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே, இலங்கைத் தமிழர்கள் சிறு மற்றும் குறு

தொழில்கள் தொடங்க மூலதன நிதி இரண்டு கோடி ரூபாய் தொகுப்பு நிதியாக வழங்கப்படும். இதன் மூலமாக ஆண்டுதோறும் சுழற்சி முறையில் தொழில்முனைவோர் தேர்வு செய்யப்பட்டு மூலதன நிதி வழங்கப்படும்.



4. 3,000 இலங்கைத் தமிழர்களுக்கு 6 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படும்.

இலங்கைத் தமிழர்கள் கௌரவமான, பாதுகாப்பான மற்றும் மேம்படுத்தப்பட்ட வாழ்க்கை வாழ்வதற்கு வேலைவாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டு பயிற்சியளிக்க திட்டமிட்டு, கடந்த 2022-2023-ஆம் நிதி ஆண்டில் ரூபாய் 9.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 5,000 இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த திட்டம் நடப்பு ஆண்டிற்கும் நீட்டிக்கப்பட்டு, 2023-2024-ஆம் நிதியாண்டில் மேலும் 3,000 இலங்கைத் தமிழர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டு பயிற்சி தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் மூலம் 6 கோடியே 30 இலட்சம் ரூபாய் நிதியில் செயல்படுத்தப்படும்.

இதன் மூலம் கல்வி பயின்ற இலங்கைத் தமிழர்களின் வாழ்க்கைத் தரம் உயர்வடைவதுடன், அவர்களது பொருளாதார நிலையும் மேம்பாடு அடையும்.



5. அயல் நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் மக்கள் பயன்பாட்டிற்காக இருமொழி இணையதளம் மற்றும் கைபேசி செயலி சேவை 5 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் செலவில் தொடங்கப்படும்.

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் தொடங்கப்பட்ட காலத்தில் வெளிநாட்டு வேலை வேண்டி வருபவர்களின் விண்ணப்பங்களை நேரடியாக பெற்று பதிவு செய்து வந்தது. அனைத்து தரப்பு மக்களும், தொலைதூர இடத்தில் இருப்பவர்களும் பயனடையும் வகையில் வெளிநாட்டு வேலைக்குச் செல்ல அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் பதிவு செய்து கொள்ள ஏதுவாக இருமொழி இணையதளம் மற்றும் கைபேசி செயலி சேவை, தமிழ்நாடு அரசு தரவுதள மையத்துடன் (Government Data Centre) இணைந்து 5 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் செலவில் தொடங்கப்படும்.

வெளிநாட்டில் வசிப்பவர்களின் குறைகளை அறிந்து நிவர்த்தி செய்ய தகுந்த நடவடிக்கைகளை எடுக்கவும், அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் வழங்கும் சேவைகளை மேம்படுத்தவும் இந்த கைபேசி செயலி மற்றும் இருமொழி இணையதளம் உதவி புரியும்.



## 6. ரெப்கோ வங்கியில் 10 புதிய வங்கி கிளைகள் தொடங்கப்படும்.

ரெப்கோ வங்கி (தாயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி மற்றும் மேம்பாட்டு வங்கி) இலங்கை, பர்மா, வியட்நாம் மற்றும் பிற நாடுகளிலிருந்து தாயகம் திரும்பிய மக்களின் மறுவாழ்விற்காக நிறுவப்பட்டதாகும்.

தற்பொழுது, இந்த வங்கி 108 கிளைகளைக் கொண்டு தென் மாநிலங்களான தமிழ்நாடு, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலும் இயங்கி வருகிறது. இதில் 83 கிளைகள் தமிழ்நாட்டிலும், 10 கிளைகள் ஆந்திராவிலும், 1 கிளை தெலுங்கானாவிலும், 8 கிளைகள் கர்நாடகாவிலும், 4 கிளைகள் கேரளாவிலும், 2 கிளைகள் புதுச்சேரியிலும் உள்ளன.

தாயகம் திரும்பியோர் அதிகம் வசிக்கும் இடங்களில் வங்கியின் வர்த்தகத்திற்கான வாய்ப்புகளைக் கருத்தில் கொண்டு இந்த ஆண்டு தமிழ்நாட்டில் 10 புதிய கிளைகள் தொடங்கப்படும்.

இதற்கான செலவினம் ரெப்கோ வங்கியால் மேற்கொள்ளப்படும்.

**செஞ்சி கே.எஸ். மஸ்தான்**
சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்